http://www.apsira.com
Indian Education Portal

Question Paper Downloaded from
http://samacheerkalvi.apsira.com/

கன்னியாகுமரி மாவட்ட பொதுத் தேர்வுகள்
காலாண்டுத் தேர்வு 2011–'12

நிலை: 7

# சமூக அறிவியல்

நேரம்: 2 மணி
மதிப்பெண்: 100

www.rktuitioncentre.blogspot.com

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு :** **10x1=10**

1. ............ நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலமே இடைக்காலம் எனப்படுகிறது.
   அ) 8 - 18 ஆ) 1- 8 இ) 18 - நிகழ்காலம்.
2. த பாலர் புகழ்மிக்க பல்கலைக் கழகத்தை .............. என்ற இடத்தில் நிறுவினார்.
   அ) நாளந்தா ஆ) தட்சசீலம் இ) விக்ரமசீலம்.
3. ாரர்களின் தலை நகரமாக .................. விளங்கியது.
   அ) டெல்லி ஆ) மாளவம் இ) தாரா.
4. பி கோரர்கள் மரபினைத் தோற்றுவித்தவர் ....................
   அ) மகேந்திரபாலர் ஆ) மிகரபோசர் இ) முதலாம் நாகபட்டர்.
5. .................. கோளில் மட்டும்தான் உயிரினங்கள் உள்ளன.
   அ) பூமி ஆ) வெள்ளி இ) செவ்வாய் ஈ) புதன்
6. புவி மேலோட்டில் மிகப்பெரிய அளவிற்கு செங்குத்து நகர்வு ஏற்படுவதை ............ நகர்வு என்று அழைக்கப்படுகிறது.
   அ) எண்டோஜெனிக் ஆ) எபிரோஜெனிக் இ) மையம் ஈ) தேய்வுருதல்.
7. பான்ஜியா ................. பெரிய தட்டுக்களாக உடையப்பட்டுள்ளது.
   அ) 6 ஆ) 7 இ) 10 ஈ) 12
8. நில நடுக்கம் தோன்றும் மையம் (இடம்) .................... எனப்படும்.
   அ) வெளி மையம் ஆ) நிலநடுக்க மையம் இ) மையம் ஈ) எரிமலை மண்டலம்.
9. ................. நாளில் இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.
   அ) 26 சனவரி 1950 ஆ) 15 ஆகஸ்ட் 1947 இ) 30 சனவரி 1930.
10. தேசியப் பாடல் 'வந்தே மாதரத்தை' இயற்றியவர் ........................
    அ) பக்கிம் சந்திர சட்டர்ஜி ஆ) இரவீந்திரநாத் தாகூர் இ) ஜவஹர்லால் நேரு.

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக :** **7x1=7**

1. நாளந்தா பல்கலைக் கழகத்தை புதுப்பித்தவர் ................
2. பாஸ்கராச்சாரியா எழுதிய சித்தாந்த சிரோமணி ஒரு சிறந்த .................. நூலாகும்.
3. கண்ட மேலோடு .................. அடுக்கால் ஆனது.
4. நில நடுக்கத்தை அளவிடும் கருவி ..............................
5. ...................... யை L அலைகள் என்று அழைக்கிறோம்.
6. நமது தேசிய ..................... ல் 'சத்யமேவ ஜெயதே' என்னும் வார்த்தை பொறிக்கப்பட்டுள்ளது.
7. இந்தியாவின் தேசியப் பறவை ..............

**III. பொருத்துக :** **8x1=8**

| | | |
|---|---|---|
| 1. சந்த் பரிதை | - | இரவீந்திரநாத்தாகூர் |
| 2. சூரிய கோயில் | - | முதல் இந்தியக் குடிமகன் |
| 3. இராச சேகரன் | - | அரசியலமைப்பின் பாதுகாவலர் |
| 4. குடியரசுத் தலைவர் | - | பிருதிவிராஜ ராசோ |
| 5. உச்ச நீதிமன்றம் | - | கற்பூர மஞ்சரி |
| 6. தேசிய கீதம் | - | இத்தாலி |
| 7. வெசூவியஸ் | - | இந்தியா |
| 8. நார்கண்டம் | - | கோனார்க். |

http://www.apsira.com
Indian Education Portal
Question Paper Downloaded from
http://samacheerkalvi.apsira.com/

www.rktuitioncentre.blogspot.com

**IV. சரியா? தவறா?** **5x1=5**

1. இராசபுத்திர அரசுகள் தங்களுக்குள் மிகவும் ஒற்றுமையுடன் திகழ்ந்தனர்.
2. பாலர் மரபைத் தொடங்கியவர் கோபாலர்.
3. புவியின் மையப் பகுதியின் வெப்பநிலை $5000^{\circ}C$ ஆகும்.
4. உலகின் மிகப்பெரிய தட்டு இந்தோ - ஆஸ்திரேலிய தட்டு ஆகும்.
5. இந்திய உச்ச நீதிமன்றம் புதுடில்லியில் அமைந்துள்ளது.

**V. குறுகிய விடையளி : (ஏதேனும் பத்துக்கு)** **10x2=20**

1. இந்திய வரலாற்றில் இடைக்காலம் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது?
2. சிசோதியர்கள் மரபினை நிறுவியவர் யார்? அவர்கள் தலைநகரம் யாது?
3. இந்தியாவில் ஆட்சி செய்த இராசபுத்திரர்களில் ஏதேனும் நான்கு வகையினரின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. சந்தேலர்கள் கோயில் கட்டிட கலைக்கு ஆற்றிய பங்களிப்பு யாது?
5. பான்ஜியா மற்றும் பெந்தலாசா பற்றி சிறு குறிப்பு வரைக.
6. எரிமலைகளின் வகைகள் யாவை?
7. நில நடுக்கங்களை பாதிக்கும் சக்திகளைக் கூறுக.
8. உலகத்தில் உள்ள பெரிய தட்டுகளின் பெயர்களை எழுதுக.
9. இந்தியாவின் அமைவிடத்தை எழுதுக.
10. நமது தேசிய கீதம் கூறும் செய்திகள் யாது?
11. இந்தியக் குடியரசுத் தலைவராவதற்குரிய தகுதிகள் யாவை?
12. ~~நமது தேசிய மலர் எதனைக் குறிக்கிறது?~~

**விரிவான விடை தருக (ஏதேனும் ஏழு):** **7x5=35**

1. இராசபுத்திரர்களின் தோற்றம் மற்றும் ஆதிக்கத்தை நிலைநாட்ட போராடியமை குறித்து விளக்கமாக எழுதவும்.
2. இராசபுத்திரர்கள் பல்வேறு துறைகளில் ஆற்றிய பங்களிப்பினை விரிவாக எழுதவும்.
3. புவி மேலோட்டின் அடுக்குகளை ஆராய்க.
4. நிலநடுக்க அலைகளின் வகைகளை விளக்குக.
5. பூமியின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தை வரைந்து அதன் அடுக்குகளை குறிக்கவும்.
6. இந்தியாவின் தேசிய சின்னங்களை விவரி.
7. நமது தேசியக் கொடியின் முக்கியத்துவத்தை விவரி.
8. லோக்சபா அல்லது மக்களவையைப் பற்றி விரிவாக எழுதுக.

**VII. வரைபடம் :** **5x1=5**

**அ) இந்திய வரைபடத்தில் கீழே குறிப்பிட்டுள்ள இடங்களைக் குறிப்பிடுக.**

அஜ்மீர், நாளந்தா, கனோஜ், பந்தல்கண்ட், டெல்லி.

**ஆ) உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும் :** **10x1=10**

பசிபிக் தட்டு, இந்தோ-ஆஸ்திரேலிய தட்டு, வட அமெரிக்க தட்டு, அண்டார்டிகா தட்டு, ஆப்பிரிக்கா தட்டு, பியூஜியாமா, கிளிமஞ்சாரோ, வெசூவியஸ், அகோன்காகுவா, மௌனலோ.